**செய்தி வெளியீடு எண் 280                    நாள் – 27.03.2010**

## அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் அகவிலைப்படி எட்டு சதவீதம் உயர்வு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

**மைய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 1.1.2010 முதல் உயர்த்தி அறிவிக்கப்பட்டதையொட்டி தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் அகவிலைப்படியை 1.1.2010 முதல் எட்டு சதவீதம் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் இன்று ஆணையிட்டுள்ளார்.**

**உயர்த்தப்பட்டுள்ள இந்த அகவிலைப்படி 1.1.2010 முதல் நிலுவையின்றி ரொக்கமாக வழங்கப்படும். அகவிலைப்படி உயர்வின் காரணமாக அரசுக்கு கூடுதலாக ஆண்டொன்றுக்கு 1447.76 கோடி ரூபாய் செலவாகும்.**

வெளியீடு: **இயக்குநர்,**

**செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.**

******